# மெட்ரோ ரயில் நிலையத்தில் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்

சென்னை, ஆக. 27: கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தின் மேற்கூரையில் 100 கிலோவாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிலையங்கள் மற்றும் கோயம்பேடு பணிமனையில் சூரிய சக்தியை பயன்படுத்தி 5.2 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதையடுத்து, கடந்த மாதம் 7-ஆம் தேதி 1.2 மெகாவாட் திறனுள்ள சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டது. இதன்பிறகு, மொத்த உற்பத்தி திறன் உயர்ந்தது.

இந்நிலையில், கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தின் மேற்கூரையில் 100 கிலோ வாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் திங்கள்கிழமை தொடங்கப்பட்டது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி கூறியது: 2019-ஆம் ஆண்டு இறுதிக்குள் 8 மெகா வாட் சூரியசக்தி மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, ஆண்டுதோறும் 116.80 லட்சம் யூனிட் மின் உற்பத்தி செய்யப்படும். இதனால், ஆண்டுக்கு ரூ.2.54 கோடி சேமிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வெளிவரும் கரியமில வாயுவின் வெளியிடும் அளவு ஆண்டுக்கு 11,587 டன் குறையும் என்றார்.